பாதிரிக்கை செய்தி -
PRESS RELEASE

இந்திய ரிசர்வ் வங்கி
RESERVE BANK OF INDIA
இணையதளம் : www.rbi.org.in/தமிழ்
Website : www.rbi.org.in
மின்னஞ்சல் /email : helpdoc@rbi.org.in

தகவல் தொடர்புத் துறை, மத்திய அலுவலகம், ஷாஹித் பகத் சிங் மார்க், கோட்டை, மும்பை-400001 தொலைபேசி: 022- 22660502
Department of Communication, Central Office, Shahid Bhagat Singh Marg, Fort, Mumbai-400001 फोन/Phone: 022- 22660502

9 ஜனவரி 2023

**ஆத்தூர் நகர கூட்டுறவு வங்கி, ஆத்தூர், சேலம் மாவட்டம், தமிழ்நாடு மீது இந்திய ரிசர்வ் வங்கி பண அபராதம் விதிக்கிறது**

நகர கூட்டுறவு வங்கியின் இயக்குநர்கள் குழு தொடர்பான உத்தரவுகளை கடைபிடிக்காததற்காக / மீறியதற்காக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), ஜனவரி 02, 2023 தேதியிட்ட உத்தரவு மூலம், சேலம் மாவட்டம், ஆத்தூர், ஆத்தூர் நகர கூட்டுறவு வங்கி (வங்கி) லிமிடெட் மீது ₹1.00 லட்சம் (ஒரு லட்சம் ரூபாய் மட்டும்) அபராதம் விதித்துள்ளது. இந்த அபராதம், இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 47 A (1) (c) உடன் இணைந்த பிரிவு46 (4) (i) மற்றும் பிரிவு 56 இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, முன் கூறப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததற்காக விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை ஒழுங்குமுறை இணக்கத்தின் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இது வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் கையெழுத்திட்ட எந்தவொரு பரிவர்த்தனை அல்லது ஒப்பந்தத்தின் செல்லுபடியை பாதிக்கும் நோக்கத்துடனானதல்ல.

## பின்னணி

மார்ச் 31, 2021 தேதியிட்ட வங்கியின் நிதி நிலை அடிப்படையிலான இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வு அறிக்கையில், வங்கி, இந்திய ரிசர்வ் வங்கியின் தற்போதுள்ள அறிவுறுத்தல்களை மீறி 2018 முதல் 2020 வரை இயக்குநர்களுக்கு நகைக் கடன்களை வழங்கியுள்ளது தெரியவந்துள்ளது. அதன் அடிப்படையில், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததற்காக வங்கி மீது ஏன் அபராதம் விதிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் கூற அறிவுறுத்தி அறிக்கை அனுப்பப்பட்டது.

தனிப்பட்ட மற்றும் வாய்வழி சமர்ப்பிப்புகளின் பரிசீலனையில் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கியின் உத்தரவுகளுக்கு கட்டுப்படாதது நிரூபிக்கப்பட்டதால், பண அபராதம் விதிக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வந்துள்ளது.

**(யோகேஷ் தயாள்)**
தலைமை பொது மேலாளர்

**செய்தி வெளியீடு: 2022-2023/1520**